மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# குலசேகர ஆழ்வாரின் வரலாற்று வைபவம்

ஜெ. இந்திரகுமாரி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி
வாணியம்பாடி

**முகவுரை**

உலகிலேயே புராதானமானது இந்து மதம், சைவமும், வைணவமும் அதன் இரு கண்களாகும். இவற்றைப் பேணிக் காக்க நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவதரித்தனர். நாயன்மார்கள் அறுபத்துமூவர், ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்கள் பல்வேறு குலங்களில் பிறந்தவர்கள். என்றாலும், இவரர்கள் தம்தம் தெய்வங்களிடம் கொண்டிருந்த பக்தியின் ஆழத்தில் ஏற்றத்தாழ்வு இல்லை. அரசர். அந்தணர், வணிகர், வேளாளர், குயவர், பாணர் போன்ற பல்வேறு குலங்களில் பிறக்குமாறு இறைவன் இவர்களுக்கு அருள் செய்தது சாதி, மதம் என்னும் வேறுபாடு எல்லாம் இறைவழிபாட்டிற்கு இல்லை என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்துவதற்கே ஆகும். அவ்விதம் சேரநாட்டில் அரசர் மரபில் நாயன்மார்களில் ஒருவராக பெருமாக்கோதையாரும், ஆழ்வார்களில் ஒருவராகக் குலசேகரரும் அவதரித்தனர்.

**சேரநாட்டின் சிறப்பு**

செந்தமிழ் நாட்டைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தரும் சிறப்புற ஆண்ட காலத்தில் சேரநாடு யானை உடைத்து, சோழ நாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து என்று போற்றும்படியாக பல்வேறு வளங்களுடன் விளங்கின. அவற்றுள் சேரநாடு தனியழகுடன் திகழ்ந்தது. எங்கும் வற்றா நதிகள், வானுயர்ந்த மலைகள் என மலை சூழ்ந்த பகுதியாக சேரநாடு விளங்கியதால் மலைநாடு என்றே அழைக்கப்பட்டது. நெடிது ஓங்கிய மரங்கள்! துள்ளிப் பாயும் அருவிகள்! கண்ணைக்கவரும் வண்ண மலர்கள்! மணம் வீசும் சந்தனக் காடுகள்! எனச் சேரநாடு இயற்கை அன்னையின் ஆலயமாக காட்சியளித்தது, இந்நாட்டின் தலைநகரமாக வஞ்சி மாநகர் விளங்கியது.

**குலசேகரர் திருஅவதாரம் செய்தது**

சேர மன்னரான திடவிரதன் சிறந்த விஷ்ணுபக்தர், அவனது அரசி நாதநாயகி, இவர்கள் தங்கள் குலம் தழைக்க குழந்தை ஒன்றை எம்பெருமானிடம் வேண்ட இறைவன் அருளால் குலசேகரர் பிறந்தார். அவருக்கு அரச குலத்திற்குரிய

நெறிமுறைகளோடு அரச பதவியை ஏற்க சகல போர்த் தொழில்களிலும் அவருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவரும் அறிவும், , கலையுணர்வும், வீரமும், துணிவும் மிக்க இளைஞராக வளர்ந்தார்.

**குலசேகரர் அரசராக முடிசூடுதல்**

திடவிரதன் தான் முதுமை அடைந்ததால், தன் மகன் குலசேகருக்கு முடிசூட்டி ஆட்சி பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அரசியுடன் கானகம் சென்றார். குலசேகரரும் செங்கோல் தவறாது ஆட்சி செய்தார். அவருக்குப் பாண்டிய மன்னன் தன் மகளைத் திருமணம் செய்துவித்தான். இல்லற வாழ்வின் இனிய பரிசாக ஒரு பெண் குழந்தையையும், ஒரு ஆண் மகளையும் பெற்றார். இங்ஙனம் இல்லறத்தை நல்லறமாகக்கொண்டு வாழ்ந்து வந்தார். எனினும் அவரது மனதில் குறை ஒன்று இருந்தது, முழுதற் கடவுள் யார்? என்று. எனவே, அறிவில் சிறந்த சான்றோர் பலரைத் தன் அரசவைக்கு வரவழைத்தார். பலநாட்கள் அவர்களோடு உரையாடினார். முடிவில் நிறைவான குணங்கள் நிறைந்த முழுதற் கடவுள் திருமாலே என்று உணர்ந்து அவரது திருஅவதாரங்களில் இராம அவதாரத்திலும், கிருஷ்ண அவதாரத்திலும் மனதைப் பறிகொடுத்து இறை பக்தியில் ஆழ்ந்தார்.

**அரசர் ஆழ்வாராக மிளிர்ந்தது**

மனித உயிர்கள் அனைத்தும் தம்தம் திறத்திற்கு ஏற்ப கனவு காணுதல் இயற்கை. அகத்துறையில் ’ கனவிழந்துறைத்தல்’ என்னும் ஒரு துறையே உள்ளது. நேரில் கணட தலைவனை கனவிலும் தலைவி கண்டு மகிழ்கிறாள். ஆண்டாளும் கண்ணனைக் காதலித்தாள். கண்ணிலும், கருத்திலும் நின்ற காதலனைக் கனவிலும் காண்கிறாள் ஆண்டாள், அதுவும் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடப்பதாக கனவு காண்கிறாள். அக்கனவை தன் தோழியிடம் உரைப்பதாக ஆறாம் திருமொழியில்,

“வாரண மாயிரம் சூழவலஞ் செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்”

(நாலாயிர திவ்ய பிரபந்தம், நாச்சியார் திருமொழி, பா. 556)

என்கிறாள். காதலன் மட்டும் கனவில் வருவதில்லை அடியார்களின் அன்பிற்காக இறைவனும் அவர்கள் கனவில் தோன்றி அருளுகிறான். இறைவனின் கருணை வெள்ளமானது குலசேகரருக்கு ஒரு நாள் இரவு கனவாக தோன்றி தீருவேங்கட மலையில் வாழும் ஸ்ரீசீனிவாச பெருமாள் தன் திவ்ய தரிசனத்தைக் காட்டி அருள் புரிந்தார். கனவில் கண்ட பெருமானை மீண்டும்மீண்டும் நினைத்துப் பார்த்து மகிழ்ந்து மண்ணவரும், விண்ணவரும் காண்பதற்கு அரியவரான இறைவன் தானாகவே வந்து தமக்கு காட்சி அளித்ததை எண்ணி பெருமிதம் கொண்டார். திருவேங்கடமலைக்குச் சென்று சீனிவாசனைக் கண் குளிர கண்டுக் மகிழ்ந்தார். இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றவராய் உள்ளம் பூரித்தார். தமிழில் பாமாலை பாடி மகிழ்ந்தார். பெருமானைக் கண்ட பின்பு குலசேகரரின் மனம் மெல்லமெல்ல அரச பாரத்திலிருந்தும். இல்லற

பந்தந்திலிருந்தும் தளர்ந்தது. நாளடைவில் அவர் மனம் முற்றிலும் இறைவழிபாட்டிலேயே ஈடுபட்டது.

நமது நாட்டின் மாபெரும் இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் குலசேகரைக் கவர்ந்தன. ஒவ்வொரு நாளும் மகாபண்டிதர்களைக் கொண்டு இராமாயணக் கதைகளைச் செவிக்குளிர கேட்டு வந்தார். அப்படி கேட்கும்போது அவர் தம்மையே மறந்து கதையோடு ஒன்றி விடுவார். ஒருமுறை இராமாயாண கதையில் இராமர் அரக்கர்களுடன் தனியாகப் போர் புரிகிறார் என்று சொற்பொழிவாளர் உணர்ச்சியுடன் சொல்லக் கேட்ட குலசேகரர் இதோ நான் பெரும்படையுடன் துணைக்குச் சென்று என் இராமனைக் காப்பேன்! என ஆவேசத்துடன் எழுந்து படை திரட்டப் புறப்பட்டார். பின்னர் பண்டிதர் ஒருவழியாக அவரைச் சமாதானம் செய்து இராமர் வெற்றி பெற்று விட்டார் என நயமாக உரைத்து அவரை தம் சுய நினைவு பெறச் செய்தார்.

இராமபக்தியில் நாளும் திளைத்த குலசேகருக்கு ஒருநாள் இராமனாகவே காட்சி தந்து, எம்பெருமான் இளைய பெருமாளான தம்பி இலக்குவன் போல் உமக்கும் எம்மீது அளவற்ற பாசம் ஆதலால், இனி நீயும் 'பெருமாள்' என்னும் திருப்பெயரால் அழைக்கப்படுவதாக என மொழிந்தார். அன்றுமுதல் வைணவகுலம் குரசேகரரைப் என்றே கொண்டாடுகிறது. நாலாயிர திவ்யபிரபந்தயத்தில் இவர் பாடிய பாசுரங்களின் தொகுப்பைப் 'பெருமாள் திருமொழி' என்றே அழைக்கின்றனர்.

**திருவேங்கடத்தில் பிறத்தலும், இருத்தலும் போதும் எனல்**

குலசேகரர் இயற்றிய பெருமாள் திருமொழியில் பிறவி வேண்டாம் என்றே இறைவனிடம்

"ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன்"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா, 677, வரி–1)

என்கிறார். மேலும் மனிதனாகப் பிறந்தாலும் விண்ணையும், மண்ணையும் ஆள்கின்ற உரிமைக் கிடைத்தாலும் அதை

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ

வானாளும் செல்வமும் மண்ணகரசும் யான் வேண்டென்"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா, 678, வரி–1–2)

என்கிறார், பிறவி வேண்டாம் என்று வேண்டும் குலசேகரர் திருவேங்கட மலையில் எம்பெருமானின் திவ்ய பேரழகைக் காண அம்மலையில்

"கோனாரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா,677, வரி–1)

"மீனாய் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677. வரி–4)

"செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா,680,வரி–4)

"தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677வரி–1)

"படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே"

(நாலாயிர திவ்ய பிரபந்தம், பெருமாள் திருமொழி பா.677, வரி–1)

என்கிறார். திருவேங்கடமலையில் மரமாகவோ, அங்குள்ள தீர்த்தத்தில் மீனாகவோ, கொக்காகவோ, வெண்பக மரமாகவோ, அவனது சந்நிதியில் அடியார்கள் மிதித்து செல்லும் கற்படியாகவோ பிறந்து எந்நேரமும் எம்பெருமானைத் தரிசித்திருக்க வேண்டும் என்பதே அவரது தணியாத வேட்கை. இராம அவதாரத்தில் உள்ளம் பறி கொடுத்ததைப் போன்று கிருஷ்ண அவதாரத்திலும் உள்ளம் பறிகொடுத்தவர் குலசேகரர்.

**முடிவுரை**

முடிசூடி மண்ணாள்வதைவிட, இறைவன் அடிபாடி அருளைப் பெறுவதே சிறந்தது என குலசேகரர் தன் மகனுக்கு முடிசூட்டி நாட்டை ஆளும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, ஆண்டவன் அடியாராக வெளியறி எம்பெருமான் உறையும் தலங்களுக்குச் சென்று கண்ணார கண்டு வாயாரப் பாடி மனதார வழிபாட்டு இறுதியில் தென்பாண்டி நாட்டு மன்னார் கோயிலில் இறைவனடி சேர்ந்தார்.